செய்தி வெளியீடு எண்: 324 நாள் : 05.07.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க (05.07.2016) மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம் பகுதி அலமாதி அடுத்த, கொடுவள்ளி ஊராட்சியில் அமைந்துள்ள, கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கத்தால் நடத்தப்படும் உறுப்பு கல்லூரியான உணவு பதனிடுதல் மற்றும் பால்தொழில் நுட்ப கல்லூரியினை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

இக்கல்லூரியில் **B. Tech,** M.Tech மற்றும் Phd., உணவு பதனிடுதல் தொழில்நுட்பம், B.Tech பால்வள தொழில் நுட்ப பாடப்பிரிவுகள் உள்ளன. இக்கல்லூரி தமிழக அரசால் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இக்கல்லூரியில் 160 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகிறார்கள்.

வணிக தொழில் இனபெருக்கம், பால் பொருட்கள் பதனிடும் பிரிவு, பழங்கள், காய்கறிகள் பதனிடும் பிரிவு மற்றும் ஆய்வுக் கூடங்கள் ஆகிய பிரிவுகளை பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியில் அக்கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவர்களிடம் கலந்துரையாடினார்.

மேலும் திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், மாகரல் ஊராட்சியில் 2014–15 ஆம் ஆண்டு இருபத்தி நான்கு லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கால்நடை மருந்தகத்தை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகள் பெற்ற பயனாளிகளை சந்தித்து ஆடு வளர்ப்புபற்றி கேட்டறிந்தார். இதில் பயனாளிகள் தங்களின் பொருளாதார நிலை மேம்பட்டதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர். ஆடுகள் பெற்ற பயனாளிகளுக்கு ஆடுகள் உடல் ஆரோகியம், இனஅபிவிருத்தி மற்றும் பால் உற்பத்தி பெருக்க உதவும் தாது உப்புக் கலவை (Mineral Mixture) பாக்கெட்டுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். ஆடுகளுக்கு கால்நடை காப்பீட்டு திட்டத்தின் கீழ் சேர்ந்து பயன்பெறுமாறு அறிவுரை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர். திலகர், கல்லூரி முதல்வர் டாக்டர் பாஸ்கர், பதிவாளர் திரு. பாலகிருஷ்ணன், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் சிறுணியம் திரு. பலராமன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**